# அம்பாந்தோட்டை மாநகர சபை
# அம்பாந்தோட்டை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2001 நவம்பர் 01 தொடக்கம் 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 ஜனவரி 24 ஆந் திகதியன்று கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டினது கணக்கீட்டுக் காலப்பகுதிக்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 மே 10 ஆந் திகதியன்று மாநகர முதல்வருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய, அம்பாந்தோட்டை மாநகர சபையின் 2011 நவம்பர் 01 தொடக்கம் 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதியின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் மாநகர முதல்வருக்கு அனுப்பிவைக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத்தவிர, 2011 நவம்பர் 01 தொடக்கம் 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்குரிய அம்பாந்தோட்டை மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற காலப்பகுதிக்கான அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) அம்பாந்தோட்டை நகர சபையானது மாநகர சபையாக மாற்றத்திற்குள்ளாகியதன் பின்னர் அம்பாந்தோட்டை பிரதேச சபையிலிருந்து சுவீகரிக்கப்பட்ட ரூபா 68,002,818 சொத்துக்களும் ரூபா 4,262,501 பொறுப்புகளும் சட்டபூர்வமாக சுவீகரிக்கப்பட்டு கணக்கிலிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) கணக்கீட்டுக் காலப்பகுதிக்கெனத் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியில் சொத்துக்கள்

மற்றும் பொறுப்புகளுக்கான கணக்குகள் மாத்திரமே சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தன. வருமான, செலவினக் கணக்கு சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

(இ) மூலதன உதவிக் கணக்கு (30381) மற்றும் வருமான, செலவினக் கணக்கில் ரூபா 1,219,827 செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் விபரமடங்கிய நாட்குறிப்பு இருக்கவில்லை.

(ஈ) 2011 நவம்பர் 01 இல் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருவாயாகிய ரூபா 928,123 பிரதான பேரேட்டில் ஆரம்ப மீதியாகக் கணக்கிலிடப்படவில்லை. 2011 நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களுக்குரிய பெறவேண்டிய முத்திரைக் கட்டண வருவாய் ரூபா 413,890 மாநகர சபைக் காலப்பகுதிக்குரிய வருவாயாகக் கணக்கிலிடப்படவில்லை. 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய மொத்த முத்திரைக் கட்டண வருவாய் ரூபா 1,342,013 ஆகும். இதுவும் கணக்கிலிடப்படவில்லை.

(உ) 2011 மகநெகும கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமுலாக்கப்படும் வேலைகளுக்காக 2011 டிசெம்பர் 20 ஆந் திகதியன்று பெறப்பட்ட ரூபா 977,404 குறித்த காலப்பகுதியின் வருவாயாக கணக்கிலிடப்படாது வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) மகநெகும கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டில் அமுலாகி 2012 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 977,404 செலவினமானது குறித்த காலப்பகுதிக்குரிய செலவினமாகவும் 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் கொடுத்தோராகவும் கணக்கிலிடப்படவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

இருபத்து நான்கு கணக்கீட்டு விடயங்களுக்குத் தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 57,711,666 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதி, மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2011 நவம்பர் 01 தொடக்கம் 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்குரிய மாநகர சபையின் வருவாயிலும் கூடிய

மீண்டுவருஞ் செலவினம் ரூபா 1,171,043 ஆகும்.

## 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 தீர்வையும் வரியும்

(அ) அம்பாந்தோட்டை நகர சபை மாநகர சபையாக மாற்றம் அடைந்ததைத் தொடர்ந்து அம்பாந்தோட்டை பிரதேச சபைக்குச் சொந்தமான கொஹொலன்கல, சிறிபோபுர, கெலியபுர, சாமோதாகம, மிரிஜ்ஜவில ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் அம்பாந்தோட்டை மாநகர சபை அதிகார வரம்பிற்குள்ளாகின. மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 230(1) பிரிவின் பிரகாரம் அக் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளது தீர்வை வரி என்பன மதிப்பீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) ஆண்டின் இறுதியில் உள்ளவாறான தீர்வை வரி நிலுவை ரூபா 1,672,465 ஆகும். இத் தீர்வை வரி நிலுவையை அறவிடுவதற்கு மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 252 (1) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.2 கடை வாடகை

2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 33 கடைகளிலிருந்து ரூபா 239,450 வாடகை அறவிடப்படட வேண்டியிருந்தது. அவ் வாடகையை அறவிடுவதற்கு மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 253(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.3 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

அம்பாந்தோட்டை மஜிஸ்டிரேட் நீதிமன்றத்திலிருந்தும் காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் ரூபா 125,625 நீதிமன்றத் தண்டப் பணமும் ரூபா 1,342,014 முத்திரைக் கட்டணமும் 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட வேண்டியிருற்தது.

## 2.3 பயன்படுத்தப்படாத பௌதீக வளங்கள்

ஒரு மோட்டார் சைக்கிளும் 2 டிறக்டர்களும் பயன்படுத்தப்படாது நெடுங்காலமாகப் பயனற்றிருந்தன. 2003 ஜனவரி 03 ஆந் திகதிய 353(5) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அவற்றைக் கைதவிர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை

## 2.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கிலிருந்த கேள்வி வைப்புகள், பிணை வைப்பு, வேலைகளுக்கான கொடுப்பனவில் தடுத்து வைக்கப்படும் பணம், நானாவித வைப்புகள் என்பவற்றின் மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 6,196,798 ஆகும். காலங்கடந்த வைப்புகள் நிதிப் பிரமாணம் 571(3) க்கமைய அரச வருவாயிலிடப்படுவதற்கோ அல்லது கொடுப்பனவு செய்யப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) மாநகர சபையால் ஒன்றிணைந்த திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்படவில்லை.

## 2.5 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு இடம்பெறவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருவாய் நிர்வாகம்
(இ) சொத்து முகாமைத்துவம்
(ஈ) ஊழியர் கடன் கட்டுப்பாடு
(உ) மனித வள முகாமைத்துவம்